**STARTING TIME 11.45 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 207/2019**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Malliga, Junior Assistant of this court, on 21.03.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **ஸ்ரீதேவி** Husband Name :

Address :

Calling : Age :

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1—ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. நான் தற்போது அரக்கோணம் வட்டாட்சியராக பணிபுரிகிறேன் என்றால், சரிதான். தாவா சொத்து அமைந்துள்ள வடமாம்பாக்கம் கிராமம் அரக்கோணம் வட்டாட்சியர் அலுவலக எல்லைக்குட்பட்டு உள்ளதா என்றால், ஆமாம்.**

**2. ஒப்படைவு செய்யப்படும் நிலங்கள், 10 ஆண்டு காலத்திற்குள் விற்பனை செய்யக்கூடாது என நிபந்தனை இருக்கும் போது, 10 ஆண்டு காலத்திற்குள் விற்பனை செய்துவிட்டால் நாங்கள் என்ன நடவடிக்கை எடுப்போம் என்றால், ஒப்படைவு பெறப்பட்ட பயனாளியின் பெயரிலேயே வருவாய் துறை ஆவணங்களை வைப்போம் அல்லது அந்த சொத்தை அரசாங்க சொத்தாக**

மாற்றம் செய்துவிடுவோம்.

3. ஒப்படைவு செய்யப்பட்ட நிலங்களை 10 வருடங்களுக்கு பிறகு குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே கிரயம் செய்ய முடியுமா என்றால், அந்த சமயத்திலும் தடையின்மை சான்று வாங்கிதான் கிரயம் செய்ய முடியும். ஒப்படைவு செய்யப்பட்ட நிலத்திற்கான நிபந்தனையை மீறி செய்யப்படும் ஆவணங்களைக் கொண்டு வருவாய் துறை ஆவணங்களில் பட்டா பெயர் மாற்றம் செய்ய முடியுமா என்றால், செய்ய முடியாது.

4. ஒப்படைவு செய்யப்பட்ட நிலங்கள் 10 ஆண்டு காலத்திற்கு பிறகு, குடும்ப உறுப்பினர்கள் இடையே உரிமை மாற்றம் செய்யப்பட்ட போது அதை ஏற்றுக் கொண்டு தான் எங்கள் அலுவலகத்தால் பட்டா மாற்றம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால், அது சம்மந்தமான ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

5. மேற்படி கிராம சர்வே எண் 524/1 ல் உள்ள நிலத்திற்கான பட்டாவை ரத்து செய்ய வேண்டி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது, ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். மாண்புமிகு உயர்நீதிமன்றம் மேற்படி சொத்து சம்மந்தமான பிரச்சனையை உரிமையியல் நீதிமன்றம் மூலம் தீர்த்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டது தெரியுமா என்றால், தெரியாது.

6. மேற்படி நிலத்திற்கான பட்டா இன்றைய தேதி வரை 1ம் பிரதிவாதி பூங்கொடி பெயரில் தான் உள்ளது என்றால், ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். 1ம் பிரதிவாதி பெயரில் செய்த கிரையம் சட்டத்திற்கு உட்பட்ட கிரையம் என்பதால்தான் அவர் பெயரில் பட்டா பெயர்மாற்றம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்றால், ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும்.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

வாதி தரப்பில் மறுவிசாரணை இல்லை.

ENDING TIME 12.01.P.M.

G YUVARAJ

Special Sub Judge, Arakkonam
Digitally signed by G YUVARAJ
Date: 2025.03.21 16:58:46 +0530